Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
"With God all things are possible"
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular letter No/GR/41/2022**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

1996 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் தேதி உருவாக்கப்பட்ட நமது மறைமாவட்டமானது, தனது இறையாட்சிப் பணியின் 26 ஆண்டுகளை இவ்வாண்டு நிறைவு செய்கிறது. நம்பிக்கை வாழ்வை ஆழப்படுத்த வேண்டும், மெசியாவின் நற்செய்திக்குச் சான்று பகர வேண்டும் என்னும் இரு பெரும் நோக்கங்களுடன் நாம் கடந்த ஆண்டு, நமது மறைமாவட்ட உருவாக்கத்தின் வெள்ளிவிழாவை அனுசரித்தோம். கொரோனா பெருந்தொற்று சற்று ஓய்ந்த நிலையில் மஞ்சாலுமூடு பங்கில் வைத்து நிறைவு விழாவைச் சிறப்பித்தோம். கடவுள் பொழிந்த எண்ணற்ற ஆசிகளுக்கு நன்றி கூறும் நல்ல நாளாக அது அமைந்தது.

இவ்வாண்டு நவம்பர் 11 வெள்ளிக்கிழமை அன்று, அனைத்து ஆலயங்களிலும் சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுத்து மறைமாவட்டத்தின் கருத்துக்களுக்காக செபிக்க வேண்டுமென இக்கடிதத்தின் தொடக்கத்திலேயே அறிவுறுத்துகிறேன்.

மேலும், இவ்வாண்டும் நாம் மறைமாவட்ட தினத்தை, மறைமாவட்ட மக்கள் அனைவரும் பங்கேற்கும் விதமாக சிறப்பாக நடத்த உள்ளோம். நவம்பர் 13, 2022 அன்று படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலயத்தில் வைத்து திருப்பலியும் நம்பிக்கை வாழ்வை மையப்படுத்திய கலைநிகழ்வையும் நடத்த இருக்கிறோம். பல்வேறு விதங்களில், தமது அளப்பரிய அருளைப் பொழிந்து நம்மை வழிநடத்தும் அருட்கடலாகிய ஈசோ மெசியாவுக்கு நன்றி கூறுவதற்கும், நம்பிக்கை வாழ்வின் ஆழத்தை பரிசோதிப்பதற்கும், நற்செய்திப் பணிக்கான பொறுப்பை மறுபடியும் புதிப்பிப்பதற்கும் இந்த மறைமாவட்ட தினக் கொண்டாட்டமானது பேருதவியாக இருக்கும்.

அன்றைய தினம் பிற்பகல் 2.45 மணிக்கு, திருப்பலியானது நடைபெறும். திருப்பிலியில், சிறப்புக் காணிக்கைப் பவனி நடைபெறும். அப்பவனியில் ஒவ்வொரு பங்குகளிலிருந்தும் கைக்காரர்கள் பங்கேற்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஒரு கைக்காரர், எரிகின்ற மெழுகுதிரியை ஏந்தி வரவேண்டும். மற்றக் கைக்காரர், சிறு காணிக்கையை செலுத்தலாம். அனைத்துப் பங்குகளிலிருந்தும் பிரதிநிதிகள் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்பதை

நினைவூட்டுகிறேன். இது ஒவ்வொரு பங்கின் விசுவாச வாழ்வை பிரதிபலிக்கும் அடையாள காணிக்கையாக அமையும்.

தொடர்ந்து நம்பிக்கை வாழ்வு மற்றும் சாட்சிய வாழ்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட, நடனம், பாடல், நாடகம் போன்றவற்றை உட்கொண்டதாக வண்ணமயமான ஒலி ஒளி காட்சியாக்கம் நடைபெறும். நம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும் திருப்பலியில் பங்கேற்று, இக்கலை நிகழ்வை கண்டுக் களிக்க வேண்டும் என்பதே என் விருப்பம். நாம் அனைவரும் நமது பாதுகாவலியாகிய திருச்சபைத் தாய் மரியாவின் அரவணைப்பில் வாழும் கடவுளின் பிள்ளைகள் என்னும் ஒருணர்வுடன் தயக்கமின்றி பங்கேற்போம்.

மேலும், அன்பானவர்களே, அதே நாள், அதாவது நவம்பர் 13, 2022 அன்று உலக வறியோர் தினம் உலகளாவிய திரு அவையில் அனுசரிக்கப்படுகிறது. திருத்தந்தை பிரான்சிஸ், இந்நாள் உணர்த்தும் அர்த்தங்களை வெளிப்படுத்தும் விதமாக அனுசரிக்க கேட்டுக் கொண்டுள்ளார். ஆகையால் அன்றைய தினத்தை சிறப்பு செபங்கள், மற்றும் இதர ஈகைச் செயல்கள் வழியாக சிறப்பிக்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த மறைமாவட்ட நற்செய்திக் கொண்டாட்டமானது இவ்வாண்டு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. டிசம்பர் மாதம் 2, 3 மற்றும் 4 தேதிகளில், கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் வைத்து இது நடத்தப்படும். இத்தியானம் பயன்மிக்கதாக அமைய, முன்தயாரிப்பு செபங்களில் தனிப்பட்ட முறையில் ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். பங்குகளிலும் குடும்பங்களிலும் செபிப்பதற்கான செப அட்டை சீனாய் தியான இல்லம் சார்பாக உங்கள் பங்குகளில் வழங்கப்படும்.

பெற்றுக் கொண்ட விசுவாசத்தின் ஒளியை மேலும் சுடர்மிக்கதாக்கி, இயேசுவை பறைசாற்றும் பணியில் உற்சாகமுடன் ஈடுபட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இறைவன் உங்களையும், உங்கள் குடும்பங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
01.11.2022

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

**✠ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

**குறிப்பு:** இச்சுற்றறிக்கையை 2022 நவம்பர் 06-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை எல்லா பங்குகளிலும் வாசிக்க வேண்டும்.